செய்தி வெளியீடு எண் : 1376 நாள் : 20.12.2021

## செய்தி வெளியீடு

தமிழ்நாடு வக்ஃப் வாரிய உறுப்பினர்களுக்கான தேர்தலில், பாராளுமன்ற முஸ்லிம் உறுப்பினர்கள் பிரிவில் ஒரு காலியிடத்திற்கான தேர்தல் கால அட்டவணை 03.12.2021 அன்று அறிவிக்கையாக வெளியிடப்பட்டது.

2. பாராளுமன்ற முஸ்லிம் உறுப்பினர்கள் பிரிவுக்கு திரு. M. முகமது அப்துல்லா என்ற பாராளுமன்ற முஸ்லிம் உறுப்பினர் வேட்பு மனு தாக்கல் செய்தார்.

3. தேர்தலில், மேற்கண்ட பிரிவில் ஒரு காலியிடத்திற்கு ஒருவர் மட்டுமே போட்டியிடுவதால், தமிழ்நாடு வக்ஃப் வாரிய (உறுப்பினர்களுக்கு தேர்தல் நடத்துதல்) விதிகள், 1997, விதி 9(6)-ன் படி, திரு. M. முகமது அப்துல்லா அவர்கள் தமிழ்நாடு வக்ஃப் வாரிய உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

தேர்தல் அதிகாரி மற்றும்
அரசு முதன்மைச் செயலாளர்,
பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர்
மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9**